# தமிழகமும் ஈழத்தமிழரும்




அரசியல் சிந்தனை
நூல் வரிசை

23



சி.அ.யோதிலிங்கம்

வெளியீடுசமூக விஞ்ஞான
ஆய்வு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சமூக விஞ்ஞான ஆய்வுமையம் மாதம் தோறும் வெளியிடும் அரசியல் சிந்தனை நூல்வரிசையில் 23வது நூலாக சி.அ.யோதிலிங்கம் எழுதிய "தமிழகமும் ஈழத் தமிழரும்" என்ற இச் சிறுநூல் வெளிவருகின்றது. தமிழகத்தில் புதிய தலைவராக மு.க.ஸ்ராலின் எழுச்சியடைந்திருக்கிறார். அவரின் ஆட்சி ஏற்பட்டிருக்கின்ற நிலையில் தமிழ்நாட்டை சிறந்த வகையில் கையாள்வதற்கு இச் சிறுநூல் வெளிச்சத்தை வழங்கும் என நம்புகிறோம்.

தமிழகத்தைக் கையாள்வது தொடர்பாக கடந்த காலத்தில் பல தவறுகள் இழைக்கப்பட்டிருந்தன. தமிழக கட்சியரசியலுக்குள் ஈழத் தமிழர் அமைப்புக்களும் மாட்டுப்பட்டமை, ஆயுத நடவடிக்கைகளை தமிழக மண்ணிலும் மேற்கொண்டமை, விடுதலை இயக்கங்களின் ஐக்கியமின்மையை தமிழகத்திலும் வெளிக்காட்டியமை என்பவற்றை பிரதானமாக குறிப்பிடலாம்.

இந்தத் தவறுகளை திருத்தி தமிழகத்தைக் கையாள்வதற்கான மூலோபாயங்கள் தந்திரோபாயங்கள் என்பவற்றை வகுத்து செயற்பட வேண்டியது இன்று அவசியமானது. இவற்றை வகுக்கும் போது ஈழத் தமிழர்களுக்கும் தமிழ்நாட்டிற்குமுள்ள உறவு, தமிழ்த்தேசிய அரசியலில் தமிழ்நாட்டின் முக்கியத்துவம், தமிழ்நாட்டைக் கையாளும்போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்பவற்றைப் பற்றி தெளிவான அறிவைப் பெறுவது அவசியமாகின்றது.

இச் சிறுநூல் மேற்கூறிய செயற்பாட்டிற்கான ஆரம்ப அறிவையும் ஆரம்ப தெளிவையும் பெறுவதற்கு பெரிதும் உதவும் என நம்புகின்றோம்.

வாசகர்கள் எமது ஏனைய நூல்களுக்கு தந்த ஆதரவு போல இதற்கும் தருமாறு தாழ்மையாக வேண்டுகின்றோம்.

நன்றி.

**சமூக விஞ்ஞான ஆய்வுமையம்,**
**28, செம்மணி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் முடிவடைந்து விட்டது. திராவிட முன்னேற்றக்கழகம் 125 ஆசனங்களுடன் தனித்துப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைத்துள்ளது. கூட்டணிக் கட்சிகளையும் சேர்த்தால் 159 ஆசனங்கள் தி.மு.க கூட்டணிக்கு கிடைத்துள்ளன. இதில் ஈழத் தமிழர்களின் தீவிர ஆதரவுக்கட்சிகளான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் தலா 4 ஆசனங்களைப் பெற்றுள்ளன. தமிழக வாழ்வுரிமைக் கட்சியும் ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ளது.

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தனித்து 65 ஆசனங்களைப் பெற்றுள்ளது. கூட்டணிக்கட்சிகளையும் இணைத்தால் அ.தி.மு.க கூட்டணிக்கு 75 ஆசனங்கள் கிடைத்துள்ளன. இது பலமான எதிர்க்கட்சியாக செயற்படுவதற்கு தாராளமாக போதுமானவையாகும்.

ஈழத் தமிழர்கள் இரண்டு அணிகளையும் தமிழ்த்தேசிய நிலை நின்று கையாள்வதற்கு தயாராக வேண்டும். இந்த இரண்டு அணிகளுக்கு அப்பால் வெளியில் நிற்கும் கட்சிகள் சிறிய கட்சிகளாக இருந்தாலும் அவற்றின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள தயங்கக் கூடாது. இதற்கப்பால் தமிழக சிவில் சமூகத்தின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கெல்லாம் முக்கிய நிபந்தனை தமிழகத்தை தமிழ்த் தேசிய நிலைநின்று கையாள்வதற்கான மூலோபாயங்கள் தந்திரோபாயங்களை வகுத்துக்கொள்வதே. இவற்றை மேற்கொள்வதற்கு தமிழத்தேசிய நிலைநின்று தமிழ்நாடு பற்றிய கோட்பாட்டுப் புரிதலையும், தமிழ்நாட்டின் முக்கியத்துவத்தையும் தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று ரீதியாகவே தமிழ்நாடு ஈழத் தமிழர்களுடன் இறுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. முன்னோர்கள் அதனை தொப்புள்க்கொடி உறவு எனக் கூறினர். தமிழ்க்கடல் எனக் கூறப்படுகின்ற பாக்கு நீரிணையே தமிழர் தாயகத்தையும் தமிழ்நாட்டையும் பிரித்து வைத்திருக்கின்றது. தமிழகமக்கள் மிகப் பெரும் சேமிப்புச் சக்தியாக இருப்பதால் ஈழத் தமிழர்களின் மிகப் பெரும் பாதுகாப்பு மதில் தமிழ்நாடுதான். தவிர இலங்கைத் தீவு இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு எல்லைக்குள் உள்ளது. இதனால் இலங்கை விவகாரங்களில் இந்தியா தொடர்ந்து தலையிட்டுக் கொண்டிருக்கும். இத்தலையீட்டு விவகாரத்தில் ஈழத்தமிழர்களின் நலன்களைப் பேணும் ஆற்றலும் தமிழ் நாட்டிற்குத்தான் உண்டு.

இலங்கைத் தீவு முழுவதும் இந்தியாவிற்குத் தேவையாக இருப்பதால் தமிழ் மக்களின் விவகாரங்களை இந்தியா இரண்டாம் பட்ச நிலையிலேயே வைத்திருக்கும் அதாவது சிங்கள தேசத்திற்கு அழுத்தம் கொடுக்கின்ற ஒரு கருவி நிலையில் மட்டும் வைத்திருக்கப் பார்க்கும். இந் நிலையில் தமிழர் நலன் நின்று இந்திய மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய ஆற்றல் தமிழ்நாட்டிற்கே அதிகம் உண்டு. எனவே கோட்பாட்டு ரீதியாக தமிழ் நாட்டையும் தமிழர் தாயகத்தையும் ஒருபோதும் பிரிக்க முடியாது.

யதார்த்த நிலை இதுதான் என்றால் தமிழ்த்தேசிய செயல்பாட்டு எல்லைக்குள்தான் தமிழ்நாடு இருக்கின்றது. எனவே தமிழ்த் தேசியத்திற்கான வேலைத்திட்டங்கள் தமிழ்நாட்டிலும் முறையாக முன்னெடுக்கப்படல் வேண்டும். இவ்வாறு முன்னெடுக்கும் போது கையாளல் விடயத்தில் மிகக் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். இதற்காக வலுவான மூலோபாயங் களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு பலவகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் முதலாவது தமிழ்நாட்டின் கேந்திர ஆற்றல் கொண்ட புவியியல் அமைவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவிசார் அரசியலைப் பொறுத்தவரை தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கு மட்டுமல்ல தமிழ்நாடும் கேந்திர இடத்தில் இருக்கின்றது. தமிழ்நாட்டின் கேந்திர ஆற்றல் தமிழர் தாயக கேந்திர ஆற்றலைவிட உயர்வானது. ஏனெனில் அதற்குப் பின்னே பெரிய நிலத்தொடர்ச்சி இருக்கின்றது. புவிசார் அரசியலில் அக்கறை கொண்ட தரப்புக்களுடன் பேரம் பேசுவதற்கு இந்த கேந்திர பலம் பெரிதும் உதவியாக இருக்கும்.

இரண்டாவது தமிழ்நாட்டின் சனத்தொகையாகும். சுமார் 7 கோடி மக்கள் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர். இது இலங்கையில் உள்ள சனத்தொகையைவிட ஐந்து மடங்கு அதிகமானதாகும். தவிர இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ள தமிழர் எண்ணிக்கை யையும் இணைத்தால் இந்தியாவில் வசிக்கும் மொத்த தமிழர்களின் தொகை எட்டு கோடியைத் தாண்டும்.

தவிர தமிழக வம்சாவழித் தமிழர்கள் உலகின் பல நாடுகளிலும் பரவலாக வாழ்கின்றனர். காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழகத் தமிழர்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களினால் பல நாடுகளில் குடியேற்றப்பட்டனர். தற்போது இந் நாடுகளில் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பிலும் உயர் பதவிகளில் தமிழர்கள் இருக்கின்றனர். தென்னாபிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மூன்றாவது அதிகூடிய எண்ணிக்கையில் தமிழர்களே உள்ளனர். இதைவிட மொரிசீயஸ், பிஜித் தீவுகள் போன்ற பல நாடுகளிலும் கணிசமானளவு தமிழர்கள் வாழ்கின்றனர். ஈழத் தமிழர்களுக்கான இவர்களின் ஆதரவினைப் பெறுவதில் தமிழ்நாடு பெரும் உதவிக்கரமாக அமையும். ஆயுதப் போராட்ட காலத்தில் தென்னாபிரிக்கா, மலேசியா, மொரீசியஸ் போன்ற நாடுகளில் தமிழர்களின் ஆதரவு பலமாக இருந்தது. முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி மொரீசியசிலும் கட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லரசுகளுக்கு சந்தைகள் தான் முக்கியம். அதற்கு அதிக சனத்தொகை அவசியம். ஈழத்தமிழர்களுக்கு பின்னால் அதிக சனத்தொகை ஆதரவாகவுள்ளது என்ற நிலை உருவாகினால் வல்லரசுகள் எதிர்ப்பு நிலை எடுப்பதில் தயக்கத்தையே காட்டும். இது ஈழத்தமிழர்களின் பேரம் பேசும் பலத்தை அதிகரிக்கச் செய்யும்.

இக்கட்டுரையாளர் அடிக்கடி சுட்டிக்காட்டுகின்ற விடயம் ஈழத்தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்த சிறிய தேசிய இனம் அது தனது விடுதலைக்கு அக ஆற்றலில் மட்டும் தங்கியிருக்க முடியாது. புற ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். புற ஆற்றலில் முக்கியமாக இருப்பதே தமிழகத் தமிழர்களை அடிப்படையாகக் கொண்ட உலகத்தமிழர்களே.

மூன்றாவது தமிழ்நாடு வரலாற்று ரீதியாக மையநீரோட்ட அரசியலுக்கு வெளியில் நிற்கின்றமையாகும். திராவிட கருத்து நிலை கொண்ட அரசியலே இதற்கு பிரதான காரணமாகும். தமிழ் நாட்டில் பிராமணீய ஆதிக்கத்திற்கு எதிராக உருவானதே திராவிட சிந்தனைகளும் திராவிட அரசியலும். பெரியார் திராவிட அரசியலின் சிற்பியாக விளங்கினார். திராவிட நாட்டு கோரிக்கையும் முன்வைத்தார். அது பின்னர் தமிழ் நாடு கோரிக்கையாக மாற்றம் பெற்றது. தமிழ் நாட்டில் இன்று ஆதிக்கம் செலுத்தும் இரு பிரதான கட்சிகளும் திராவிட அரசியல் மூலம் உருவான கட்சிகளே! இந்த கட்சிகளின் ஆதிக்கத்தை மையநீரோட்ட கட்சிகளினால் சிறிதளவு கூட உடைக்க முடியவில்லை. இவ்வாறு மையநீரோட்ட அரசியலிலிருந்து விலகி நிற்பது ஈழத்தமிழர் போராட்டத்திற்கு சார்பானதாகும்.

தமிழ் நாட்டில் தற்போது இரண்டு பெரும் மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்று ஈழத்தமிழர் விவகாரம். இன்று பொது விவகாரமாக மாற்றப்பட்டுள்ளது. எந்த ஒரு அரசியல் கட்சியும் ஈழத்தமிழர் விவகாரத்தை விட்டு விட்டு அரசியல் செய்ய முடியாத நிலையே உள்ளது. இதற்கு மையநீரோட்ட கட்சிகளான பாரதீய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனதா, காங்கிரஸ், இடதுசாரிக் கட்சிகள், தொடக்கம் கமலஹாசனின் மக்கள் நீதி மையக்கட்சி வரை விதிவிலக்கானதாக இருக்கவில்லை.

இரண்டாவது தமிழ் நாட்டின் படித்த மத்திய தரவர்க்கம் ஈழத்தமிழர் விவகாரத்தை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளது இதற்குள் மருத்துவர்கள், பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்பவியலாளர்கள், வரை பலரும் உள்ளடக்கம். இந்தத் தரப்பு உலகத்தமிழர்களின் விடுதலையோடு இணைத்தே ஈழத்தமிழர் விவகாரத்தைப் பார்க்கின்றது.

எனவே இந்த முக்கியத்துவங்களை கவனத்தில் எடுத்து பார்க்கும் போது தமிழ்நாடு ஈழத்தமிழர்களுக்கு மிகப்பலமான ஒரு களம். ஒரு பாதுகாப்பு மதில்.

இந்த உண்மையைப் பூரணமாக விளங்கிக் கொண்டு பொருத்தமான மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களை வகுத்து மேற்கொள்ள தமிழ்த்தேசிய சக்திகள் தயங்கக்கூடாது

இதில் முதலாவது தமிழ்நாட்டில் ஒரு இணைப்பு அலுவலகத்தை உருவாக்குவதாகும். தமிழ் நாட்டு ஆதரவாளர் களைக் கொண்டே இவ் இணைப்பு அலுவலகத்தை உருவாக்கலாம். இந்த இணைப்பு அலுவலகம் தமிழ் நாட்டில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை ஒழுங்கமைத்து ஒருங்கிணைக்கலாம். கட்சியரசியலில் ஈடுபடாத சிவில் தரப்பினரைக் கொண்டே இந்த அலுவலகத்தை உருவாக்குவது ஆரோக்கியமாக இருக்கும். தமிழ் நாட்டிற்கு வெளியே ஏனைய மாநிலங்களிலிலும், மத்திய அரசு மட்டத்திலும் மேற்கொள்ள வேண்டிய பணிகளையும் இவ் அலுவலகம் ஒருங்கிணைப்பது நல்லது

இரண்டாவது தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளை கையாள்வதாகும். தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளை கையாளும் போது மூன்று விடயங்களை பிரதானமாக கவனத்தில் எடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அதில் முதலாவது தமிழ் நாட்டுக்கட்சிகளையும் , மைய நீரோட்ட கட்சிகளையும் ஒன்றாகக் கையாளாமல் வேறு வேறு வகையாக கையாள வேண்டும். மைய நீரோட்ட கட்சிகள் தமிழ்த்தேசிய அரசியலில் உறுதியாக ஒரு போதும் நிற்க மாட்டாது. அவை ஈழத்தமிழர்களை கருவியாகப் பயன்படுத்தி இந்திய நலன்களை அடைந்து கொள்வதிலேயே அக்கறையாக இருக்கும். இந்திய மத்திய அரசு தமிழ் மக்களுக்கு வழங்க விரும்பும் அரசியல் தீர்வுக்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்குமான அரசியல் தீர்விற்குமிடையே பாரிய இடைவெளி உண்டு.

இரண்டாவது தமிழ் நாட்டின் கட்சி அரசியலுக்குள் ஈழத்தமிழ் அரசியல் சக்திகள் மாட்டுப்படக் கூடாது. கட்சிகளின் தலைவர்களுக் கிடையிலான அக முரண்பாடுகளில் ஈழத்தமிழர்கள் கருத்துச் சொல்வதை தவிர்க்க வேண்டும். தமிழகக் கட்சிகளிடம் ஈழத்தமிழர் விவகாரத்தில் பொதுவான ஆதரவுக்குரலைத்தர வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க வேண்டும்.ஆனால் துரதிஸ்டவசமாக எம்மவர்களில் சிலர் அங்குள்ள கட்சிகள் , தலைமைகள் தொடர்பாக கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இது தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவர் கலைஞர் கருணாநிதி போரின் இறுதிக்காலத்தில் மேற்கொண்ட உண்ணாவிரதம் தொடர்பாக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அந்த விமர்சனங்களில் நியாயப்பாடுகள் இருந்தாலும் தந்திரோபாய ரீதியாக அது ஈழத் தமிழர்களின் நலன்களுக்கு ஏற்றதல்ல.

தி.மு.க தமிழ்நாட்டில் மிகப்பெரும் கட்சி. அங்குள்ள கட்சிகளில் வலுவான நிறுவனப்பலம் கொண்ட கட்சியும் இதுதான். ஒவ்வொரு சிறிய சிறிய கிராமங்களிலும் அதற்கு கிளைகள் உண்டு. அதன் மாவட்ட அமைப்பாளர்கள் குறுநிலமன்னர்கள் போன்ற நிலையிலேயே உள்ளனர். தவிர தலைமைகள் தவறிழைத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.மு.க.வின் அணி தமிழ்த்தேசிய அரசியலுக்கு சார்பானது. இத்தகைய பெரிய கட்சியை எதிர்த்துக் கொண்டு தமிழ் நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான பொதுக்குரலை கட்டியெழுப்ப முடியாது.

பாராளுமன்றப் பாதையில் செயல்படும் அரசியல் கட்சிகளிடம் தூய்மையான அரசியலை எதிர்பார்க்க முடியாது. அவற்றிற்கு தேர்தல் நலன்களும் அதிலிருந்து கிடைக்கும் பதவிகளும் தான் முக்கியம். தி.மு.க. மட்டும் அதற்கு விதிவிலக்காக இருக்கும் எனக்கூற முடியாது. இறுதி யுத்த காலத்தில் நமது அரசியல் தலைவர்களே தொலைபேசியை நிறுத்தி வைத்து விட்டு இருந்திருக்கின்றனர். நம்ம தலைவர்களே தவறுகளைச் செய்யும் போது தமிழகத்தலைவர்களை எவ்வாறு குறை சொல்ல முடியும்.

ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியமைத்த நிலையில் ஈழத் தமிழரின் நலன் நின்று அரசியல் பொருளாதார கலாச்சார ரீதியாக சில நடவடிக்கைகளை எடுக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்ராலினிடம் வற்புறுத்த வேண்டும். அவற்றில் முதலாவது கருணாநிதியால் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ ஆதரவாளர் அமைப்பு அதாவது ரெசோ அமைப்பை புனரமைத்து முன்கொண்டு செல்வதாகும். இந்த அமைப்பு ஈழத் தமிழர் விவகாரத்தை இந்திய மயப்படுத்த உதவிகரமாக அமையும். மாநிலக்கட்சிகள் பல மாநிலங்களில் செல்வாக்குள்ள கட்சிகளாக விளங்குகின்றன. அவை இச் செயற்பாட்டில் அதிக பங்களிப்பை வழங்கக்கூடியதாக இருக்கும். ஏற்கனவே கருணாநிதி ரெசோ அமைப்பை உருவாக்கிய போது பல மாநிலத் தலைவர்கள் பங்குபற்றியிருந்தனர். அவர்களில் அப்போது ஆந்திர முதலமைச்சராக N.D.ராமராவும் ஒருவராவர் இந்தியாவின் பிரதமராக பதவிவகித்த வாஜ்பாயும் பங்கு பற்றியிருந்தார். ஆனால் துரதிஸ்டவசமாக விடுதலை இயக்கங் களிடையே ஏற்பட்ட மோதல்களினால் அப்பணி முன்னேறவில்லை. இன்று அப்பணி மிகவும் அவசியமாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது கட்சி அரசியலுக்கப்பால் ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக ஒரு பொதுக் குரலை தமிழ்நாட்டிலும் தமிழ்நாட்டிற்கு வெளியே இந்திய மட்டத்திலும் கட்டியெழுப்ப வேண்டும். இப்பணியில் தனித்து அரசியல் கட்சிகளை மட்டும். இணைத்துக் கொள்ளாமல் சிவில் அமைப்புக்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். கட்சி முரண்பாடுகள் இப்பணியில் குறுக்கிடவிடாமல் பார்த்துக்கொள்வதும் முதலமைச்சரின் கடமையாகும். தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் இப் பணியில் இணைத்துக்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்ராலின் தயங்கக்கூடாது.

மூன்றாவது ஏற்கெனவே தமிழ்நாடு சட்டசபையில் ஜெயலலிதா ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக மூன்று தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளார். இன அழிப்புத் தீர்மானம், சர்வதேச விசாரணைத் தீர்மானம் அரசியல் தீர்வு தொடர்பாக பொது வாக்கெடுப்புத் தீர்மானம் என்பனவையே அவையாகும். இதனை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்வது பற்றி முதலமைச்சர் உபாயங்களை வகுத்து செயற்பட வேண்டும். மத்திய அரசையும் இத் தீர்மானங்களை ஆதரிக்கும்படி வலியுறுத்த வேண்டும். மேலும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை இன அழிப்புத் தொடர்பாக சாட்சியங்களைத் தொகுக்கும் பணியைத் தொடங்கவுள்ளது. அதற்கான உதவிகளைச் செய்வதற்கும் தமிழ்நாடு தயங்கக்கூடாது.

நான்காவது தற்போது தமிழர் தாயகத்தில் பச்சை ஆக்கிரமிப்பு இடம்பெறுகின்றது. யுத்தம் முடிவடைந்த பின்னர் மன்னராட்சிக் காலத்தில் வெற்றியடைந்த அரசுகள் தோல்வியடைந்த அரசுகளை எவ்வாறு சூறையாடுமோ அது போல பச்சையாக சூறையாடல் இடம்பெற்றது. தற்போது அது மீண்டும் புதுப்பிக்கப்பட்டு தொடர்கின்றது. நிலப்பறிப்பு, மொழிப் புறக்கணிப்பு, பொருளாதார அழிப்பு, கலாச்சார சிதைப்பு என இவ் ஆக்கிர மிப்புக்கள் தொடர்கின்றன. அரச திணைக்களங்கள், படைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட அனைத்து அரசாங்கங்கக் கருவிகளும் இவ் ஆக்கிரமிப்புக் களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய தனியான தேசமாக இருப்பதை அழிப்பதே இவ் ஆக்கிரமிப்பின் நோக்கமாகும்.

இவ் ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். இதற்கான அழுத்தத்தை தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசிற்கூடாக சிறீலங்கா அரசிற்கு வழங்க வேண்டும்.

இவை அரசியல் ரீதியாக மேற்கொள்ள வேண்டிய பணிகளாகும். அதேவேளை பொருளாதார ரீதியாகவும் பல பணிகள் காத்திருக்கின்றன. அதில் முதலாவது தமிழர் தாயகத்தில் ஏற்கனவே இடம்பெற்றுவரும் இந்திய அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்துவதாகும். குறிப்பாக பலாலி விமானநிலையம், காங்கேசன்துறை துறைமுகம் என்பவற்றின் அபிவிருத்திச் செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். பலாலி விமான நிலையம் ஓரளவு சீர்செய்யப்பட்டாலும் சிறிய விமானங்கள் தரித்து நிற்குமளவிற்கே ஓடுபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது பெரிய விமானங்களும் தரையிறங்கக் கூடியதாக விஸ்தரிக்கப்படல் வேண்டும். தற்போது அரசாங்கம் கொரோனாவைச் சாட்டி விமான நிலையத் தளபாடங்களை அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையத்திற்கு மாற்றியுள்ளதாக ஒரு தகவல் வந்திருக்கின்றது. இத்தகவல் இன்னமும் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப் படவில்லை. இத்தகைய செயற்பாடுகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். விமான நிலைய ஊழியர்களாக சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் உள்ளனர். இதுவும் மாற்றப்பட்டு தமிழர்கள் நியமிக்கப்படல் வேண்டும். பலாலி விமான நிலையம் தொடர்பாக இந்திய, இலங்கை, தமிழக, தாயக பிரதிநிதிகளின் கூட்டுக்கண்காணிப்பு அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல காங்கேசன்துறை துறைமுகமும் முக்கியமானது. அதற்கான பணிகள் இன்னமும் முறையாக ஆரம்பிக்கப்படவில்லை. இதற்கான அழுத்தத்தையும் தி.மு.க. அரசாங்கம் கொடுக்க வேண்டும். ஏற்கனவே உடன்பாடு காணப்பட்டது போல தமிழ் நாட்டிற்கான கப்பற்போக்குவரத்தையும் உடனடியாக ஆரம்பித்தல் வேண்டும். சாதாரண மக்களும் தமிழக மக்களுடன் உறவுகளைப் பேணுவதற்கு இக்கப்பற் போக்குவரத்து அதிகம் உதவக் கூடியதாக இருக்கும். இவை தவிர இந்திய வீட்டுத் திட்டங்களையும் துரிதப்படுத்துவதோடு தமிழக முதலீட்டாளர்கள் தமிழர் தாயகத்தில் முதலிடுவதற்கு ஊக்கங்களையும் வழங்க வேண்டும். இதற்கு முதற்படியாக தமிழக முதலீட்டாளர்கள் வடக்கு - கிழக்கிற்கு விஜயம் செய்து முதலீட்டிற்க்கான ஆய்வுகளை மேற்கொள்வது நல்லது. வடக்கு - கிழக்கில் வளமாக இருக்கின்ற மூலப்பொருட்களை பயன்படுத்தி முதலீட்டுத்திட்டங்களை உருவாக்குவது ஆரோக்கியமானது.

மூன்றாவது கலாச்சாரப் பணிகளாகும். இதில் முக்கியமானது தமிழக சிவில் சமூகத்துடன் உறவுகளைக் கட்டியெழுப்புவதாகும். ஆசிரியர்கள், சட்டத்தரணிகள் ஊடக வியலாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள என அனைத்துத் தரப்பினருடனும் உறவுகளைக் கட்டியெழுப்ப தமிழக அரசு உதவ வேண்டும். கலைப்பண்பாட்டு பரிமாற்றங்களுக்கும் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். அதே வேளை இலங்கைத்தமிழ் மாணவர்களுக்கான உயர்கல்வி , தொழிற்கல்வி , ஊடகக் கல்வி என்பவற்றிற்கான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அத்துடன் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு குறுகியகால தொழிற்பயிற்சிகள் வழங்குவதற்கும் உதவ வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இதுவரை தமிழக முதலமைச்சர் எவரும் தமிழர் தாயகத்திற்கு விஜயம் செய்யவில்லை. இந்தக் குறைபாட்டை தமிழகத்தின் புதிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவர்த்தி செய்ய வேண்டும். எவ்வளவு விரைவாக விஜயம் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக விஜயம் செய்வது பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் கொடுத்ததாக அமையும்

இக்கோரிக்கைகள் தி.மு.க.அரசாங்கத்தை மட்டும் இலக்காகக் கொண்டவையல்ல. தமிழ் நாட்டின் முழு அரசியல் சமூகத்தையும் இலக்காகக் கொண்டவை எனவே பிரதான எதிர்க் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தொடக்கம் அனைத்து அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும்

இங்கே ஒரு விடயத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு தமிழக அரசியல் கட்சிகளுக்குமிடையேயான உறவு நலன் சார் உறவாகும். ஆனால் ஈழத்தமிழர்களுக்கும் தமிழக மக்களுக்குமிடையேயான உறவு நலன்சாரா உறவாகும். அரசியல் கட்சிகள் கட்சி நலன்களையும், தேர்தல் நலன்களையும், அடிப்படையாகக் கொண்டே ஈழத்தமிழர் ஆதரவுச் செயற்பாடுகளில் இறங்கும் ஆனால் தமிழக மக்கள் உண்மையான தமிழ்த்தேசிய உணர்வின் அடிப்படையில் செயற்படுவார்கள் அதனால் தான் 28 க்கு மேற்பட்டவர் தீக்குளித்து இறந்திருக்கின்றனர். அது முழுக்க முழுக்க நலன் சாரா உறவு. எனவே தமிழக அரசியல் கட்சிகளையும் , தமிழக சிவில் சமூகத்தையும் தனித்தனியாகக் கையாள வேண்டுமே தவிர ஒன்றாகக் கையாளக் கூடாது.

மூன்றாவது தமிழக சிவில் சமூகத்தை கையாள்வதாகும். சிவில் சமூகம் என வரும் போது அதற்குள் பொது அமைப்புக்கள், மத அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், ஊடக அமைப்புக்கள் போன்றன உள்ளடங்கும். இவ் அமைப்புக்களுடன் கூட்டாகவும், தனியாகவும் உறவுகளைக் கையாள வேண்டும். கடந்த காலத்தில் தமிழக சிவில் சமூகத்துடன் போதியளவு உறவுகள் கட்டியெழுப்பப் படவில்லை. இதனால் ஈழத்தமிழர் விவகாரத்தை தமிழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயப்படுத்தியதிலும் அதிக பலவீனங்கள் இருந்தன. தமிழக சிவில் சமூகத்தைச் சேர்ந்த கல்வியாளர்கள் நல்லாட்சிக் காலத்தில் தாயகம் வந்தபோது அவர்களுடன் விரிவான கலந்துரையாடல் இங்குள்ள சிவில் தரப்புக்களினால் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது தமிழகத்திலுள்ள சிவில் அமைப்புக்களுடன் வலுவான தொடர்புகளை ஏற்படுத்தித் தருவதாக அவர்கள் உறுதியளித்தனர். ஆனால் அந்தப் பணி வளர்த்தெடுக்கப்படவில்லை. அண்மையில் தமிழ்க் கல்வியாளர்கள் இந்தியத் தூதுவருடன் நடாத்திய கலந்துரையாடலிலும் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அவரும் உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருவதாக உறுதியளித்திருந்தார். ஆனாலும் நடைமுறையில் அதற்கான முன்னேற்றங்களைக் காணவில்லை.

இது விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்படாமைக்கு தாயகத்தில் பொது அமைப்புக்கள் பலவீனமாக இருப்பதும் ஒரு காரணமாகும். முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் மன்றம் போன்றவையாவது பலமாக இருந்தன. இன்று அதுவும் பலவீனமான நிலையில் உள்ளது. தமிழ் சிவில் சமூக அமையம், தமிழ் மக்கள் பேரவை, ஊடக அமைப்புக்கள் என்பனவும் பலவீனமானவையாகவே உள்ளன. தமிழக சிவில் சமூகத்திடமிருந்து வினைத்திறனுள்ள செயற்பாடுகளை எதிர்பார்க்க வேண்டுமென்றால் தாயகத்திலுள்ள பொது அமைப்புக்களை முதலில் பலப்படுத்த வேண்டும்.

நான்காவது தமிழகத்திற்கு வெளியே ஏனைய மாநிலங்களைக் கையாள்வதாகும். ஈழத்தமிழர் விவகாரத்தை இந்திய மயப்படுத்தாமல் இந்திய மத்திய அரசிடமிருந்து வினைத்திறனுள்ள நகர்வுகளை எதிர்பார்க்க முடியாது. எனவே இந்திய மயப்படுத்த வேண்டுமென்றால் ஈழத்தமிழர் விவகாரத்தை தமிழகத்திற்கு வெளியேயான மாநிலங்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும். இந்த விவகாரத்தில் இரண்டு விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழர்களுக்கு சார்பானதாகும். அதில் ஒன்று தமிழக வம்சாவழித் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வெளியே ஏனைய மாநிலங்களிலிலும் கணிசமானளவு வாழ்கின்றமையாகும் ஆந்திரா, கர்நாடகம், கேரளம் போன்ற தென் மாநிலங்களிலும் மும்பாய், புது டில்லி போன்ற நகரங்களிலும் கணிசமான அளவு தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்கள் ஈழத்தமிழர்கள் விவகாரத்தை மாநில மயப்படுத்துவதில் பெரிதும் உதவியாக இருப்பர்.

இரண்டாவது பல மாநிலங்களில் மாநிலக்கட்சிகளே செல்வாக்குள்ள கட்சிகளாக விளங்குகின்றன. மைய நீரோட்டக் கட்சிகளின் செல்வாக்கு மிகக் குறைவு. மகராஸ்டிரம், ஒரிசா, பீகார், ஆந்திரா, மேற்கு வங்காளம், பஞ்சாப், காஸ்மீர், நாகலாந்து, மீசோராம் ,அஸாம் போன்றவற்றில் இவற்றைக் காணலாம். பெரிய மாநிலமாக இருக்கின்ற உத்தரப் பிரதேச மாநிலத்திலும் மாநிலக் கட்சிகள் செல்வாக்கு நிலையில் உள்ளன.

மறைந்த கலைஞர் கருணாநிதி டெசோ அமைப்பை உருவாக்கிய போது மாநிலக்கட்சிகளே அவருக்கு கை கொடுத்தன. ஆந்திர முதலமைச்சராக இருந்த N.D.ராமராவ் இது விடயத்தில் வலுவான ஆதரவைக் கொடுத்திருந்தார். இம்மாநிலக் கட்சிகள் மாநில உரிமைகளுக்காக மத்திய அரசுடன் மோதிக் கொண்டிருப்பதால் ஒடுக்கு முறையின் வலிகளும் இவற்றிற்கு நன்றாகத் தெரியும்.

ஐந்தாவது மத்திய அரசைக் கையாள்வதாகும். மத்திய அரசினை ஈழத்தமிழர்கள் நேரடியாகக் கையாளாமல் தமிழ் நாட்டுக்கூடாக கையாள்வதே அதிகளவில் வினைத்திறனுள்ள பயன்களைத் தரும். இலங்கைத் தமிழர்கள் மத்திய அரசினை நேரடியாகக் கையாளும் போது அதிக அழுத்தங்களைக் மத்திய அரசிற்கு கொடுக்க முடியாது. இனிவரும் காலங்களில் மைய நீரோட்டக் கட்சிகளில் பிரதானமானவையாக விளங்கும் பாரதீய ஜனதாக்கட்சியோ, காங்கிரஸ்கட்சியோ, தனித்து அரசாங்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்க முடியாத நிலையே ஏற்படும். அச்சந்தர்ப்பங்களில் மாநிலக்கட்சிகளையும் இணைத்து ஆட்சி அமைக்கின்ற போது தமிழ் நாடு வலிமையான பேரம் பேசக் கூடிய நிலையில் இருக்கும். காங்கிரஸ் கட்சி தற்போது மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது. அதனால் ஒரு போதும் தனித்து ஆட்சியமைக்க முடியாது. தவிர, மைய நீரோட்ட அரசியலுக்கு வெளியே தமிழ்நாடு இருப்பதும், புவிசார் கேந்திர இடத்தில் தமிழ்நாடு இருப்பதும் அதன் பேரம்பேசும் பலத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

இந்தியா கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் நாடு மாநிலத் தலைவர்களில் ஒருவரான மகேந்திரன் இக் கட்டுரையாளரிடம் பேசும் போது மத்திய அரசை ஈழத் தமிழர்கள் தனித்து கையாள வேண்டாம். தமிழ்நாட்டிற்கூடாக கையாளுங்கள். நாம் மத்திய அரசுடன் ஈழத் தமிழர்களுக்காக போராடி சில வெற்றிகளைப் பெற்றிருக்கின்றோம். மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் அவரைக் கலந்துகொள்ளவிடாமல் தடுத்திருந்தோம் எனக் கூறியிருந்தார்.

தமிழக சக்திகளைக் கையாளும்போது பொதுவான தமிழ்த் தேசிய வேலைத்திட்டம் இருப்பதும் அவசியமானது. அதில் மிக முக்கியமானது தமிழ் அரசியலின் இலக்கும் வழிவரைபடமுமாகும். இது விடயத்தில் பொது இணக்கத்தினை தமிழக சக்திகளிடையே ஏற்படுத்த வேண்டும். கருணாநிதியின் டெசோ அமைப்பும் இவ்வாறான பொதுத்திட்டத்தினை முன்வைத்திருந்தது.

தமிழ்த்தேசிய சக்திகள் இக்கையாளல் விடயம் தொடர்பாக பொது உரையாடல்களை இப்போதே தொடங்குவது நல்லது. ஆயுதப் போராட்டத்தில் உலகமே வியக்கத்தக்க உச்சத்தைக் கண்டவர்கள் தமிழர்கள். அதே போல அரசியல் போராட்டத்திலும் உச்சத்தைக் காண்பதற்கு ஒரு போதும் தயங்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவந்த நூல்கள்

1. நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கையும் தமிழ் மக்களும். – சி.அ.யோதிலிங்கம்
2. இந்தியாவும் தமிழ் மக்களும். – சி.அ.யோதிலிங்கம்
3. நினைவு கூர்தல் – 2017 – நிலாந்தன்
4. "தமிழ் அரசியலின் இலக்கும் வழிவரைபடமும்" சி.அ.யோதிலிங்கம்
5. மோடியின் இலங்கைப் பயணமும் மலையகமும். சி.அ.யோதிலிங்கம்
6. இந்து சமுத்திரமும் சீனாவும். – கலாநிதி.கே.ரீ.கணேசலிங்கம்
7. வட – கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
8. இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள். – சி.அ.யோதிலிங்கம்
9. ஈழத்தமிழர் அரசியல் வரலாறு – 1883 தொடக்கம் 1968 வரை (சுருக்க குறிப்புக்கள்) பாகம் – 01 – சி.அ.யோதிலிங்கம்
10. வட கொரியாவும் சர்வதேச அரசியலும் கலாநிதி. கே.ரீ. கணேசலிங்கம்
11. இலங்கை இந்திய ஒப்பந்தமும் தமிழ் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
12. மலையக மக்களின் அடையாளம் எது? – சி.அ.யோதிலிங்கம்
13. ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் வளர்ச்சிக்கட்டங்கள் – சி.அ.யோதிலிங்கம்
14. 2009 இற்குப் பின்னரான தமிழ் இராஜதந்திரம் – நிலாந்தன்
15. தமிழ்த் தேசியம்! நெருக்கடிகளும், வாய்ப்புக்களும் சி.அ.யோதிலிங்கம்
16. கன்னியாவைப் பாதுகாப்போம் – சி.த. காண்டீபன், சி.கமலகாந்தன், சி.அ.யோதிலிங்கம்
17. இளைய தலைமுறைகளுக்கு ஞாபகங்களை கடத்துங்கள் – நிலாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும் – சி. அ. யோதிலிங்கம்

19. புதிய அரசியல் கலாச்சாரமே இன்றைய தேவை – சி.அ.யோதிலிங்கம்

20. தமிழ்மொழி புறக்கணிப்புக்கு வயது – 64 – சி.அ.யோதிலிங்கம்

21. கிழக்கு! தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்கிறதா? –சி.அ. யோதிலிங்கம்

22. இனப்பிரச்சனை என்றால் என்ன? – சி.அ. யோதிலிங்கம்

விலை – ரூபா 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org